ச்சனத்தாரால் அங்

பக்திசந்திரிகா நெ. 1.

# ஸ்ரீமதி

# அம்பரீஷோபாக்கியானம்.

ஞானம்பாள்—என்னும் திவ்ய சரித்திரம் எழுதிய

கஜாம்பாள்

எழுதியது.

1021/3-17

திருத்தமான மூன்றும் பதிப்பு.

ஸ்ரீ பாலசுப்ரமண்யம் கம்பேனி

ராயப்பேட்டை P. O.

சென்னை.

1917. [விலை அணு 0-1-6

TB
0-,6
N17
17949

Printed at the
Sacchidhanandha Press,
Komaleeswaranpet, Madras.

179401

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

# ஸ்ரீ மதி
# அம்பரீஷோபாக்கியானம்.

## அத்தியாயம் 1.

பூர்வம் இக்ஷுவாகு வம்சத்து அரசருள் திரிசங்கு என்பவனொருவனிருந்தான். அவனுக்குப் பத்மாவதி என்றொரு மனைவி இருந்தாள். அவள் நல்ல லக்ஷணமுடையவள்; கணவனுக்கு இனியள்; தன்னை வந்து யாசித்தவர்களுக்கும் தவிர மற்றும் ஏழை ஜனங்களுக்கும் குறைவற அளிக்கும் தயாள குணமுடையவள். இராஜ ஸம்பத்தை உடையவளாய் இருந்தும் பத்மாவதி தன்னையோர் ஏழையினும் எளியவளாகவே கருதி நடப்பாள்; பழிபாவங்களுக்குப் பயப்படுவாள்; சுயநலங் கருதி எதையுஞ் செய்யாள். அவள் பொறுமை யென்னும் அருமையான குணத்தையே பூஷணமாகக் கொண்ட உத்தமி. சேஷபரியங்கத்தில் யோக நித்திரை செய்பவரும், புருஷோத்தமரும், காலருத்திரனாகவும், ஸ்ருஷ்டி கர்த்தாவாகவும், விஷ்ணுவாகவும்

இருந்து எல்லோராலும் வணங்கப் படுகிறவருமான நாராயணமூர்த்தியை * மனம், வாக்கு, காயம் முதலிய வைகளால் பூஜித்துப் பக்தி புரிந்துவரும் உத்தம ஸ்திரீ ரத்தினமாக விளங்கினள். எப்போதும் இந்தப் பத்மாவதியின் நாவானது 'நாராயணா! கோவிந்தா! அச்சுதா! மாதவா!' என்னும் பகவானுடைய நாமங்களை உச்சரித்தவாறே இருக்கும். அவள் பரந்தாமனுடைய அடியார்களைக் காணின் அவர்களை வணங்கி அவர்கள் விரும்பும் எப்பொருளையும் மகிழ்ச்சியுடன் அளித்து எப்போதும் உபசரித்து வருவாள்.

2. அநேக வருடகாலம் இவ்விதம் சிறிதும் சலிப்பில்லாமல் பத்மாவதி நடந்துவந்தாள். ஒருநாள் பத்மாவதி, தானும் தன் கணவனுடன் ஏகாதசி விரதமிருந்து துவாதசியன்று பக்தகோடிகளுக்கு அன்போடன்னமளித்துப் பின் தானும் உண்டு பகவானது ஸந்நிதியில் படுத்து நித்திரை செய்தாள். இப்போது பக்தபராதீனனாகிய பரந்தாமன் பத்மாவதியின் கனவிற்றோன்றி "மாதரசே! உன் பக்திக்கு மகிழ்ந்தனன்; நீ விரும்பும் வரமென்ன?" என்றார். அப்போது பத்மாவதி "ஜனார்த்தன! எனக்குப் பூவுலகத்தில் வேண்டும் வரம் யாது? உனது திருவருளால் எனக்கு சகலபாக்கியங்களும் உண்டா யிருக்கின்றன. ஆனல் மக்கட்பேறில்லாக் குறையொன்றுதான் வெகுநாளாக என்னை வருத்துகின்றது. எங்கள் வம்சத்தில் யார் செய்த புண்யத்தாலோ உன்னைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். இனி நான் தன்னியையானேன். ஜகதீசா! நின்பால் அன்புடையவனும், சக்ரவர்த்தித் தன்மைக்குரியோனும், மகாதேஜஸ்வியும், தன் ஒழுக்கத்தினின்றும் சிறிதுந் தவறாத தூய குணமுடையவனும்,

சதாசார சீலனுமாகிய ஓர் ஆண் மகவை யடைய அருள்புரியவேண்டும்" என்றாள். அன்பர்க்கு எளியனும், அரவிந்தலோசனனுமாகிய அச்சுதன் "உனது கோரிக்கை நிறைவேறும்" என்று கூறி ஒரு கனியைப் பத்மாவதியின் கரத்திலளித்து, அக்கணமே மறைந்தார்.

3. பகவான் மறைந்ததும் பத்மாவதி விழித்துக் கொண்டாள். "ஆஹா! என்ன பாக்யம் செய்தோம்! வெகு நாளைய தவத்தின் பலன் இன்று கிடைக்கப்பெற்றோம். 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பதை இன்றல்லவா கண்டேன். என்ன அதிசயமிது! கனவு கண்டபடியே கையில் கனியும் இருக்கிறதே" என்று வியப்புற்று உடனே தன் நாயகனை யெழுப்பி அவனிடம் தன்னை யடிமை கொண்டு தரிசனந்தந்தருளிய இறைவனது திருவருளின் பெருமையைக்கூறிக் கனியையும் காண்பித்து அதை அவனிடம் மனமுவந்து அளித்து மீண்டும் அவனாலளிக்கப் பெற்று ஜகத்பிரபுவாகிய அந்த ஜனார்த்தனனது திருவடியைத் தியானித்துக் கொண்டே உண்டனள்.

4. பின் பத்மாவதி கர்ப்பந்தரித்துப் பத்துமாதம் சென்றவாறே ஒரு புத்திரனைப் பெற்றாள். அந்த அருமைப் புதல்வனிடத்தில், பிறந்த அக்கணமே குலத்தை விருத்திக்குக் கொண்டுவரத்தக்க இலக்ஷணங்கள் அமைந்திருந்தன. அதுகண்ட பத்மாவதியும், திரிசங்குவும் கரைகடந்த களிப்படைந்து, சகல புவன கர்த்தாவாகிய நாராயண மூர்த்தியின் கருணையை எண்ணி எண்ணி அவரைத் துதித்தார்கள். பின்னர் பிராஹ்மணர்களுக்குத் தானமளித்துக்குழந்தைக்கு ஜாதகர்மாதிகளைச் செய்து அம்பரீஷன் என்னும் திரு

நாமமும் சூட்டி அருமையாய் வளர்த்து வந்தார்கள். அப்பால், தக்கவயதில் கல்விபோதித்து ராஜாக்களுக் குரிய யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலியவைகளைக் கற்றுக் கொடுத்தனர். அம்பரீஷன் அவைகளெல்லாவற்றிலும் நிகரற்றவனென்று யாவரும் புகழுமாறு பெயர் பெற்றான். வயதில், பத்மாவதியின் தவமே இங்ஙனம் வாலிபனுயிற்றென்று கூறும்படி விளங்கினன். திரிசங்கு அம்பரீஷனது குணத்துக் கும், அழகுக்கும், ஔதாரியத்திற்கும் ஏற்றபடி ஒரு குலமகளைத் தேடி மணஞ் செய்வித்து மகிழ்ந்தனன்.

5. பின்னர்ச் சிலநாள் அரசன் இராஜ்யபாரம் வகித் திருந்து வைகுண்டபதவி யடைந்தான். உடனே முனி புங்கவர்களும், அமைச்சர்களும் சேர்ந்து அம்பரீஷ னுக்குப் பட்டங் கட்டுவித்தார்கள்.

## அத்தியாயம் 2.

அம்பரீஷன் தான் தனது இராஜ்ய பாரத்தை ஏற்றநாள் முதலாக, மன்னுயிரைத் தன்னுயிரா கக் கருதி அவர்கள் வேண்டுவனவற்றைக் குறைவறச் செய்து யாவரும் தன்னிடத்து மிகுந்த அன்பு பாராட்டி வரும்படி பரிபாலித்து வந்தான். அம்பரீ ஷனுடைய மந்திரிமார்கள் இராஜநீதியைக் காலதேச வர்த்தமானங்களுக்கிணங்க, ஆராய்ந்து நடத்தத் தக்க வர்களாகையால், அவன், மன்னர் மன்னர்களும் தன்னை வணங்கத் தனியரசு செலுத்தி வந்தான். அம் பரீஷனும், சங்குசக்ரதாரும் உலகரக்ஷகருமாகிய

நாராயண மூர்த்தியிடம் தன் அன்னை பத்மாவதியைப் போலவே விசேஷமான பக்தி செலுத்தி வந்தான்.

2. உலகத்தில் மானிடப்பிறவி எடுத்தலரிது; அதிலும் இவ்வாறு அங்கவீனம் இல்லாமலும் அளவிறந்த ஐச்வரியவானுகவும், அறிவில் மிக்கவனுகவும் பிறத்தலரிதாகும்; இவைகளுடன் தெய்வபக்த சிரோமணியாக விளங்குவது அரிதினு மரிதேயாம்; தெய்வபக்தி எவனிடத்துப் பரிபூர்ணமா யமைந்திருக்கிறதோ அவனிடம், மானிடர்க்கு இயற்கையாகவே பகையாயிருந்து அவர்களைப் பிறப்பிற்கும் இறப்பிற்கும் நரகவாசத்திற்கும் உள்ளாக்கும் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம் என்னும் அறுவகைப் பகைகளும் அணுகா. உலகத்தில் பலர் நீதிமான்களாகவும், அறிவிற்சிறந்தவராயும், கலைவல்லோராயும் புஜபல பராக்கிரமமுடையவராயும் இருக்கலாம். ஆனுல் இவ்வறுவகைப் பகைகளையுங் களைந்து களங்கமற்ற சித்தமுடையோரா யிருத்தல் மிகவுமரிதாம். உலகப்பற்றை முற்றுமொழித்த தபோதனர்களே சில சமயம் இப்பகைவர்களுக்குள்ளாகிக் கலக்கமடைகின்றனர். இவைகளைத் தொலைக்கத்தக்க வஜ்ராயுதமெது வென்று ஊகிக்கின், தெய்வபக்தியேயாம். இது அம்பரீஷனிடம், அவன் எந்தப் பிறவியிற் செய்த புண்ணிய வசத்தாலோ அமைந்திருந்தது. ஆகையால், அவன் தெய்வத்திற்கு நல்லவனுய் இருப்பதுபோல உலகத்தில் எல்லோருக்கும் நல்லவனுகவே இருந்தான்.

3. அம்பரீஷனுடைய அருமையான குணத்திற்கும் அவன் ஐச்வர்யத்திற்கும் அவனுடையபுகழுக்கும் எற்ப ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பெண்குழந்தை திருப்பாற் கடலில் உலகம் புகழத்தோன்றிய திருமடந்

தையோ என்று சொல்லத்தக்க அழகுவாய்ந்திருந்தது. அதற்கு அம்பரீஷன் ஸ்ரீமதியெனத் திவ்ய திருநாமம் புனைந்து அருமையாக வளர்த்து வந்தான்.

4. பின்னர்ச் சிலவருடங்கள் கடந்தன. அப்பால் அம்பரீஷன், ராஜ்யம் மக்கள் மனை உற்றார் யாவரும் சதமல்ல வென்பதை நினைத்துத் தனக்கு அழியா நிலையினைத் தருவதாகிய ஜகதீசன் திருவருள் பெற வேண்டு மென்னும் அவாவுடையவனாகித் திடீரென்று அமைச்சர்களிடம் தன் ராஜ்யத்தை யொப்புவித்து விட்டுத் தான் தனியே கானகம் சென்று அங்கே அநேக வருடகாலம் சங்கு சக்ர கதாபத்மதாரியும், சதுர்ப் புஜங்களுடன் கூடிய பிர்மா விஷ்ணு சிவசொரூபியும் புராண புருஷரும் புருஷோத்தமருமாகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை இதயாரவிந்தத்தில் நிலைநிறுத்தித் தியானித்துமகாமந்திரமாகிய அஷ்டாக்ஷரத்தை இடைவிடாது ஜபித்துத் தவம் புரிந்து வந்தான்.

5. அகிலபுவன கர்த்தாவாகிய நாராயணமூர்த்தி அவனது தவத்திற்கிரங்கி, அநேக தேவர்கள் புடை சூழ்ந்து வர, கருடவாகனத்தின்மீது எழுந்தருளி அந்தவனத்திற்கு வந்தனர்.

6. ஜகத்பிரபுவாகிய மாதவன் அம்பரீஷனைக் கண்டதும் அவன் மனத்தின் திடத்தைச் சோதிக்கத் திருவுளங்கொண்டார். உடனே தமது கருடவாகனத்தை ஐராவதமாக மாற்றிக்கொண்டு தாம் தேவேந்திரன் போலுருவங்கொண்டு அம்பரீஷன் முன்னே தோன்றி "அம்பரீஷா! உனக்கு மங்களமுண்டாகக்கடவது. நான் ஸ்வர்க்கலோகநாதனாகிய இந்திரன். உன்னைக் காப்பாற்ற எண்ணி இன்று நான் இங்கு வந்திருக்கின்

றேன். நீ விரும்புவதென்ன? அளிப்பதற்குச் சித்தமாயிருக்கிறேன்; கேட்பாயாக?" என்றனர்.

7. அறிவில் மிக்கானும் அரிபக்த சிரோமணியுமாகிய அம்பரீஷன் ஐராவதத்தின்மீது எழுந்தருளியிருக்கும் இந்திரனை நோக்கி, "இங்கே நான் உன்னை உத்தேசித்துத் தவம் புரியவில்லை; உன்னிடமிருந்து நான் எந்த வரத்தையும் விரும்புகின்றேனில்லை. நீ வந்த வழி நோக்கிச் செல்லலாம். உலககர்த்தாவாகிய நாராயண மூர்த்தியே எனக்கு நாதன். நீ வீணே இங்கு வந்து எனதாச்சிரமத்திற்குக் கெடுதி செய்யாதே, செல்" என்றனன்.

8. இதைச் செவியுற்றதும் பகவான் அம்பரீஷனுடைய திடமானபக்திக்கு மகிழ்வுற்று, அக்கணமே, சங்கம், சக்கரம், கதை, சார்ங்கம் முதலிய ஆயுதபாணியாய் அஞ்சனபர்வதம் போலக் கருடவாகனத்தின் மீது அவனுக்கெதிரே தோன்றினர். அந்தப்பரமபதியைக் கண்ணுற்றதும் அம்பரீஷன் அளவிறந்த ஆநந்தங் கொண்டு தரையிலே விழுந்து பணிந்தெழுந்து "ஏ லோகநாதா! அருள் புரியவேண்டும்! நாதனே! ஜகத்பதியே! ஸர்வலோக சரண்யா! ஆதிபுருஷா! அப்பிரமேயா! கமலலோசனு! உன்னையே சரணமடைந்தேன், காப்பாற்றவேண்டும், வேறு கதியில்லேன்" என்று ஸ்தோத்தரித்தான். பகவான் அவன் ஸ்தோத்திரத்திற்குகந்து "அம்பரீஷ! எனது பரமபக்தன் நீயே யாகிருய். உனது தவத்தினுல் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். உன்விருப்பமென்ன? தெரிவி; அளிக்கின்றேன்; நான் எப்போதும் அன்பர்களுக்கு அன்பனுக இருப்பவன். உனக்கு வரமளிப்பதன்

பொருட்டு இங்கு வந்திருக்கிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

9. இங்ஙனம் இறைவன் கூறியதும் அம்பரீஷன் ஆனந்த பரவசனாகித் தழதழத்த குரலோடு "விஷ்ணு வென்னுந் திருநாமங்கொண்ட உம்மிடத்திலேயே என் சித்த மிருத்தல்வேண்டும்; இந்தப்பூமண்டலமுழுவதும் உமது பக்தர்களாகவேண்டும்; இந்தப் பூமிக்கு நான் சக்கரவர்த்தியாதல் வேண்டும்" என்னும் இவ்வரங்களைக் கேட்டான். பகவான் அம்பரீஷனைநோக்கி "உன் கோரிக்கை நிறைவேறும். இந்தச் சக்கராயுதத்தை உனக்குத் தருகின்றேன். பெற்றுக்கொள். முனிவர்களுடைய சாபத்தினால் ஏற்படும் துக்கங்களையும் இது நிவிர்த்திக்கும். பகைவர், பிணி இவைகளாலேற்படும் துக்கங்களையும் இந்த ஆயுதம் நிவிர்த்திக்கும்" என்று கூறி அந்த ஆயுதத்தை அம்பரீஷனிடம் அளித்தருளி அந்தர்த்தானமாயினர்.

10. பின்னர் அம்பரீஷன் தவத்தினின்றும் எழுந்து நாராயணனைத் தியானித்தவாறே அயோத்தியை யடைந்து முன்போல இராஜ்யபரிபாலனம் செய்து வந்தான்.

11. அயோத்தியில் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவரும் தத்தம் மரபிற்கேற்ற ஒழுக்கத்தினின்றுந் தவறுமல் இருந்தனர்; வீடுகடோறும் விஷ்ணுமூர்த்தியை வைத்து ஆராதனை புரிந்து வந்தனர். எங்கே பார்த்தாலும் வேதகோஷங்களும் ஹரிநாம சங்கீர்த்தனங்களும் யாக மந்திர கோஷங்களும் நிறைந்திருந்தன. அப்போது எல்லாப் பொருள்களும் மலிந்திருந்தன. ஜனங்கள் குறையென்பதெதுவு மில்லாதிருந்தார்கள்.

வியாதிபயம், சோரபயம் என்பன கிடையா. ஆகை யால் ஜனங்களெல்லோரும் தன்னைப் புகழ்ந்து வாழ்த்த அரசுசெலுத்தி வந்தான் அம்பரீஷன்.

---

## அத்தியாயம் 3.

ஒருநாள் பகற்பொழுதில் அம்பரீஷன் ஸந்தோஷமாயிருக்கும் வேளையில் அவனிடத்திற்குப் பர்வதமுனிவரும் மகிமைபொருந்திய நாரதமுனிவரும் வந்தார்கள். அம்பரீஷன் அம்முனிவர்களைக் கண்டதும் நமஸ்கரித்து அன்புடன் வரவேற்று விதிப்படி பூஜித்து உபசரித்தான். முனிவர்களிருவரும் அம்பரீஷனை ஆசீர்வதித்து மனமகிழ்ந்தனர். அப்போது அரசனது மாளிகையின் மற்றொரு புறமிருந்து ஸ்ரீமதி அன்னம் போல நடந்து அரசனுக்கருகே வந்து நின்றாள்.

2. அக்கன்னிகையைக் கண்டதும் நாரதமுனிவர் பரமாச்சரியமடைந்து "அம்பரீஷ! லக்ஷணங்களெல்லா மமையப்பெற்ற இப்பெண்மணியார்?" என்று கேட்டார். அம்பரீஷன் "முனிவர்பெருமானே! இந்தக் கன்னிகை என் பெண்; இவள் பெயர் ஸ்ரீமதி; இவளுக்கு ஒரு வரன் வேண்டும்; பார்த்துக்கொண்டிருக்கின்றேன்; சரியாய்க் கிடைக்கவில்லை" யென்றான். அப்பொழுது நாரதர் ஸ்ரீமதி யென்னும் அந்தக் கன்னிகையைத் தாமடைய விரும்பினர். அவருக்கு அருகே வீற்றிருந்த பர்வதமுனிவரும் ஸ்ரீமதியைத் தாமடையக் கருதினர். பிறகு இருவரும் அம்பரீஷனோடு சற்று நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்து விடைபெற்று

அங்கிருந்து புறப்பட்டனர். அப்போது நாரதமகா முனிவர் அம்பரீஷனைத் தனித்த ஓரிடத்திற்கு அழைத்துச்சென்று தாம் கொண்ட கருத்தைத் தெரிவித்தார். அரசன் "அதைப்பற்றிப் பிறகு தெரிவிக்கின்றேன்" என, நாரதமுனிவர் அங்கிருந்து திரும்பினர். பின் பர்வதமுனிவர் அம்பரீஷனிடம் சென்று தாம்கொண்ட கருத்தை வெளியிடவே, அரசன் "இதென்ன வம்பு? சண்டைபோடும் இரண்டாட்டிற்கிடையே யகப்பட்ட நரியின் கதியாயிற்று நமது பாடு! இதைப் பற்றி முடிவான தொன்றும் நாமிப்போது இவர்கட்குத் தெரிவிக்கக் கூடாது" என்று எண்ணி இருவரையும் பார்த்து "ஐயன்மீர்! நீங்களிருவரும் எனது பெண்ணை விரும்புகின்றீர்கள். நீங்களோ எல்லாந் தெரிந்த மகான்கள். நான் தங்களுக்கு என்ன தெரிவிக்கப் போகின்றேன். நான் ஒரு நல்லநாளில் சுயவரம் ஏற்படுத்த உத்தேசித்திருக்கின்றேன். அப்போது நீங்களிருவரும் வர வேண்டும். அநேக தேசத்து அரசர்களும் வருவார்கள். அந்தக் கூட்டத்தில் என் புத்திரி உங்களிருவருள் யாரை வரிக்கினும் சரி; அல்லது வேறு எந்த அரசனை வரிக்கினும் சரி; நான் அவ்வாறே வரனை நிச்சயிக்கின்றேன்; இஃதுண்மை" என்றான். முனிவர்களிருவரும் அவ்வாறே யாகட்டுமெனக் கூறி விடைகொண்டு சென்றனர்.

3. பிறகு நாரதமுனிவர் "இதற்கென்ன யோசனை செய்வது; ஸ்ரீமதி நம்மை வரிக்காமல் பர்வதமுனியை வரித்து விட்டாலென்ன செய்கிறது? பிறகு நமக்குப் பெரிய அவமானமன்றோ நேரிடும்; என்ன செய்யலாம்?" என்று நெடுநேரம் யோசித்து அப்பால் விஷ்ணு

17949

விடம் போவதாகத் தீர்மானித்து வைகுண்டலோகஞ் சென்று பகவானை வணங்கி, "புவனேசுவர! பரம கருணாநிதியே! உமக்கு நமஸ்காரம்; தங்களிடத்தில் இரகசியமாக ஒரு விஷயந் தெரிவிக்கும்பொருட்டு வந்திருக்கின்றேன். சிறிது செவிகொடுத்தருளல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர். பகவான், மந்தஹாஸஞ் செய்து "நாரதமுனிவரே! உமது சித்தக்கருத்தைத் தெரிவியும்" என்றார். உடனே நாரதர் "பிரபுவே! உமது சரணாரவிந்தம் மறவாத பரமபக்தனான அம்பரீஷன் என்னும் அயோத்தியாதிபதிக்கு ஒப்புயர்வற்ற அழகுவாய்ந்த ஒரு பெண்மணி யிருக்கின்றாள். அவள் பெயர் ஸ்ரீமதி. அந்தப் பெண்மணியை நான் மணஞ் செய்துகொள்ள விரும்புகின்றேன். உமது திருவடி மறவாத பர்வதமகா முனிவரும் அந்தக் கன்னிகையைத் தாம் மணந்து கொள்ள விருப்பங்கொண் டிருக்கின்றனர். நாங்களிருவரும் அம்பரீஷ மகாராஜனிடம் எமது கருத்தைத் தனித்தனியே தெரிவித்துக்கொண்டோம். அரசன் "நான் சுயம்வரம் ஏற்படுத்துகிறேன்; அப்பொழுது அரசர்களெல்லோரும் வருவார்கள்; நீங்களிருவரும் அச்சமயம் வந்திருங்கள்; அப்போது உங்களிருவரில் என் குமாரத்தி யாரை மணந்து கொள்ள விரும்புகிறாளோ அவரையே நான் வரனாகக் கொள்கின்றேன்" என்று தெரிவித்திருக்கிறான். அதுகேட்டு நாங்களிருவரும் "அவ்வாறே செய்யலாம்" என்று தெரிவித்து அவனிடம் விடை கொண்டு அங்கிருந்து திரும்பிவிட்டோம். தேவரீர், எனது விருப்பத்தை நிறைவேற்றல் வேண்டும். இறைவனே! சுயம்வரமண்டபத்துக்கு வரும் பர்வதமுனிவருடைய முகம் அந்தப் பெண்மணியின் கண்ணுக்குக் குரங்கின் முகம்போலக்

காணவேண்டும். அப்படிக் காணப்படுமாயின் அவரை ஸ்ரீமதி வரிக்கவே மாட்டாள். பின் என்னை விரும்பு வாளென்பதிலையமில்லை" என்று தமது எண்ணம் முற் றுப்பெறுதற்கு உபாயமும் தெரிவித்துக் கொண்டார்.

4. இது கேட்டதும், பரந்தாமன் தலையை யசைத் துப் புன்முறுவல் செய்து, "முநிவரே! நீர் உமதிருப் பிடம் போகலாம்; உமது கருத்து நிறைவேறும்" என் றார். நாரதர், "நாம் சித்தியடைந்தோம்; இனி ஐயமில்லாமல் ஸ்ரீமதி நம்மையே வரிப்பாள்; பக்த னுக்கு இரங்கும் பரமதயாளுவின் அருள் கிடைத்த பின்பும் தடை ஏற்படுமோ? யாவும் அவன் செயல்; அவன் நினைக்கின் உலக முழுதும் இல்லாமலே போய் விடும். அவன் செயலை யாரறிபவர்? ஆதியந்த மில் லாத அந்த மாதவன், பக்தி ஒன்றுக்குத்தான் கட்டுப் பட்டவர். என் பக்திக்கு அவனதுமனம் மகிழ்ந்தது போலும்" என்றெண்ணி இருகரங்களையுஞ் சிரமேற் குவித்து நின்று—

"குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார் படுதுயராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளு மருளொடு பெருநில
[மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன் நாராயண
[வென்னும் நாமம்."

என்று பகவானைத் துதித்து மனமகிழ்ச்சியோடு சென்றார்.

5. பிறகு பர்வத மகாமுநிவரும் 'ஸ்ரீமதி சுயம் வரத்தில் நம்மை வரிக்காமல் நாரதரை வரிக்கின் நமது விருப்பம் நிறைவேறாமற் போய்விடுமே' என்ற எண்

ணங்கொண்டு நெடுநேரம் யோசித்து நாராயண மூர்த்தியிடம் சென்று நமக்கு வழிதேடிக் கொள்ளவேண்டுமென்று நிச்சயித்து, அவ்வாறே பகவானிடம் வந்தார். சங்குசக்ர பீதாம்பரதாரியாகிய ஜகத் பிரபுவை வணங்கித் தமது மனத்திற் கொண்ட விருப்பத்தைத் தெரிவித்து, "சுயம்வர சமயத்தில் நாரதரின் முகம் ஸ்ரீமதிக்கு மாத்திரம் கோலாங்கூலம் என்னும் குரங்கின் முகம்போலத் தெரியவேண்டும்; அப்போது அவள் அவரை வரியாது என்னையே விரும்புவாள்" என்று கூறினர்.

6. இது கேட்ட பகவான் புன்சிரிப்படைந்து "முநிவரே! நீர் போகலாம்; உமது கருத்துப்படியே யாகும். ஆனல் நீர் இச்செய்தியை நாரதரிடம் தெரிவிக்க வேண்டாம்" என்றார். பர்வதமகாமுநிவர் "சகலலோக சரண்யனுகிய ஈசன் நினைக்கின் எது தான் முடிவதரிதாகும்? பகவான் பக்த பராதீனனல்லவா? கடவுளை நம்பினோருங் கைவிடப்படுவதுண்டோ? நாம் கிருதார்த்தனுனோம்" என்றெண்ணித்தரையில் விழுந்து பணிந்தெழுந்து கைகுவித்து நின்று—

"பச்சைமா மலைபோல் மேனி பவளமாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தங் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டே னரங்கமா நகரு ளானே"

என்று துதித்து ஜகத்பதியைத் தியானித்தவாறே சென்றார்.

---

## அத்தியாயம் 4.

ஸ்ரீமதியின் சுயம்வர தினம் வந்தது. அயோத்தியாபுரியெங்கும் மங்களகரமான பதாகைகள், தோரணங்கள், மலர்மாலைகள், பூரணகும்பங்கள் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. தெருக்களெங்கும் நீர் தெளித்துச் சுத்தஞ்செய்யப்பட்டிருக்கின்றன. பட்டணமெங்கும் வாசனை வஸ்துங்களாலும் மலர் மாலைகளாலும், வாழை, கமுகு, பேரீஞ்சு, மாவிலை முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அரசர்கள் வீற்றிருக்கத் தக்கபடி மண்டபத்தில் அங்கங்கு ஆசனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சபையானது தேவலோகத்துச் சுதர்மையோ அல்லது குபேரன் சபையோ வென்று எண்ணத்தக்க பிரகாசத்தோடு விளங்குகிறது.

2. இவ்வாறு விளங்கும் திவ்ய சபைக்கு அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து அம்பரீஷன் உபசரணையைப் பெற்று ஆசனத்தமர்ந்தனர். அம்பரீஷன், நாரதமுநி, பர்வதமுநி இவர்களுடைய வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றான். இச்சமயம் அரசன் ஆக்ஞைப்படி பணிவிடைப் பெண்கள் ஸ்ரீமதியைச் சுயம்வரமண்டபத்திற்கு அழைத்து வந்தார்கள். சர்வலோக நாயகனுகிய நாராயணமூர்த்தியின் இதயாரவிந்தத்தில் இனிதமர்ந்தருளும் லக்ஷ்மிதேவியே இந்தப் புவியில் மானிடமாதாக உருவெடுத்து வந்தனளோ வென்று சொல்லத்தக்க அழகுடன் ஸ்ரீமதி விளங்குகின்ருள். லக்ஷ்மிதேவிக்கு ஒப்பிட்டபின் இனி ஸ்ரீமதி

யின் அவயவங்களைப்பற்றிப் பேசுவது மிகையே யல்லவா? ஸ்ரீமதியைச் சூழ அநேக பணிவிடைப் பெண்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். சபையானது அவளது தேஜஸால் ஜ்வலிக்கின்றது.

3. இங்ஙனம் தேஜோமயமாய் விளங்கும் திவ்ய சபைக்குப் பிரஹ்ம புத்திரராகிய நாரதரும் பிஹ்ரம நிஷ்டராகிய பர்வத முநிவரும் விஜயமாயினர். தன்னுடைய சபைக்கு முநிவர் பெருமானிருவரும் எழுந்தருளியதைக் கண்ட அம்பரீஷன் மிகுந்தபரபரப்புடன் எதிர்கொண்டு சென்று வரவேற்றுத் தக்க ஆசனங்களில் வீற்றிருக்கச் செய்தான். முநிவர்களும் முக மலர்ச்சியுடன் ஆசனத் தமர்ந்தார்கள்.

4. பின் அம்பரீஷன் ஸ்ரீமதியை யழைத்துச் சபையில் நிறுத்தி அவள் கரத்தில் ஒரு மாலையைக் கொடுத்து அவ்விரு முநிவரையுங்காட்டி, "இவர்களுள் நீ யாரை விரும்புகிறாயோ அவரை விதிப்படி வணங்கி அவர் கழுத்தில் மாலையைச் சூட்டு" என்று சொன்னான். ஸ்ரீமதி மாலையை வாங்கிக்கொண்டு சித்தப் பிரமை கொண்டவள்போல ஒன்றுஞ் செய்யாது நின்றாள். அம்பரீஷன், "குழந்தாய்! ஏன் யோசிக்கின்றாய்? இவ்விருவருள் நீ யாரை விரும்புகிறாயோ அவர் கழுத்தில் மாலையைப்போடு" என்றான். ஸ்ரீமதி பயந்து தன் தந்தையின் திருமுகநோக்கி, "இவ்விருவருடைய முகங்களும் என் கண்ணுக்குக்குரங்கின் முகம்போலத் தெரிகின்றன. தாங்கள் கூறுகிறபடி இவர்கள் நாரத பர்வத முநிவர்களல்லர்; இவர்களுக்கு மத்தியில் பதினாறு வயதுள்ள ஒரு சுந்தர வாலிபனிருக்கின்றான். இவன் சர்வாபரண பூஷிதனாக விளங்குகின்றான். இவ

17940

னது மேனி நீலமேகம் போலப் பிரகாசிக்கின்றது. கைகளிரண்டும் உத்தம புருஷர்களின் இலக்ஷணங்களுக்கொத்தவாறு முழந்தாள் வரையில் நீண்டிருக்கின்றன. கண்களிரண்டும் தாமரை மலர்போலப் பிரகாசிக்கின்றன. தொடைகளின் அழகு வர்ணிக்கமுடியாமலிருக்கிறது. இந்தத் திவ்யசுந்தர புருஷன் இடுப்பில் தரித்திருக்கும் வஸ்திரமும் மேல் உத்தரீயமும் சொர்ணத்தின் காந்தியைவிட மேலாகக் காணப்படுகின்றன. வயிறு ஆலிலைபோலச் சிறுத்து மூன்று மடிப்புடன் தெரிகிறது. அதனிடையேயுள்ள உந்தி வெகுநன்றாய்த் தெரிகிறது. கை, கால், முகம், முதலியன செந்தாமரைபோலத் திகழ்கின்றன. பற்கள் முல்லை மலரை ஒத்து இலகுகின்றன. இப்படிப்பட்ட உத்தம இலட்சணங்களமைந்த சுந்தரன் இவ்விருவருக்கும் இடையே மறைந்திருந்து மந்தஹாசத்துடன் என்னைப் பார்த்துக்கொண்டிருக்கிறான். உங்கள் கண்ணுக்குத் தென்படவில்லையா?'' என்றாள்.

5. இது கேட்டதும் நாரதமுனிவர் ஆச்சரியமடைந்து "பெண்ணே! நீ பார்க்கும் சுந்தர வாலிபனுக்குக் கைகள் எவ்வளவிருக்கின்றன?'' என்று கேட்டார்.

ஸ்ரீமதி—கைகளிரண்டு தானிருக்கின்றன.

பர்வதமுனிவர்—பெண்ணே! அவனுடைய மார்பில் என்ன இருக்கிறது? கழுத்தில் அவன் பூண்டிருப்பதென்ன?''

ஸ்ரீமதி—ஒரு மாலையும் கரத்தில் வில்லும் இருக்கக் காண்கின்றேன்.

6. இவ்வாறு கூறவே முனிவரிருவரும் சற்றுயோசித்து, ஒகோ! இது மாயாவியாகிய மஹாவிஷ்ணுவின்

மாயையாகத்தா னிருக்க வேண்டுமென்று நிச்சயித்துக் கொண்டார்கள். அல்லாமலும் அந்த மாயாவியைத் தவிர வேறு யார் நமது முகத்தைக் குரங்கின் முகம் போலத் தெரியும்படி செய்யவல்லவர்; அவன் சேஷ்டைதான் இதுவும் எனத் தெரிந்து கொண்டார்கள்.

7. இவ்விரு முனிவரும் இவ்வாறு யோசித்துக் கொண்டிருப்பதைக்கண்ட அம்பரீஷன் 'ஏன் மயங்குகிறீர்கள்?' எனக்கேட்டான். முனிவர்கள், "நாங்கள் மயங்கவில்லை; மயக்கங்கொண்டிருப்பது நீ தான். எங்களிருவரில் யாரையேனும் ஒருவரை உன் புத்திரி வரிக்கட்டுமே" என்றார்கள். ரிஷிகள் சபித்துவிடுவார்களோவென்று அச்சமடைந்த அரசன் ஸ்ரீமதியைப் பார்த்து "இவ்விருவருள் யாருக்கேனும் மாலையைப் போடு" என்று சற்றுரத்துக் கூறினான். ஸ்ரீமதியும் பயந்து "என்ன அநியாயமிது! அரச குடும்பத்திற் பிறந்த நான், குரங்குமுகமுடைய புருஷனுக்கா மாலையிடுவது? என் விதியை என்னென்று சொல்வேன்!" என்றெண்ணி மனங் கலங்கி உடனே "ஆ! ஜகதீசா! ஜனார்த்தனா! பரமதயாநிதியே?" என்று மனத்தில் பரமபதியாகிய கடவுளைத் தியானித்தவாறே சற்று நின்றாள். உடனே அந்த க்ஷணத்தில் முன்தோன்றிய சுந்தர வாலிபன் மீண்டும் எதிர்ப்பட்டான். ஸ்ரீமதி உடனே அந்த வாலிபன் கழுத்தில் மாலையை யணிந்தாள். மாலையை யணிந்த மறு நிமிஷத்திலேயே ஸ்ரீமதியை அங்கொருவரும் பார்க்கவில்லை. சபை முழுதும் பெரிய ஆச்சரியமடைந்தது. "என்ன! என்ன!! எங்கே விவாகப்பெண்? யாரெடுத்தேகியது? யாருக்கு மாலையிட்டாள் அந்தச் சுந்தரி? எந்த வீரன் நம்மை யறியாமல் எடுத்தேகியவன்?" என்று ஒருவர்க்கொரு

வர் கேட்டுக்கொண்டு ஆசனத்தை விட்டெழுந்து ஆ! ஆ! என்றார்கள். பெரிய குழப்ப முண்டாயிற்று. வந்த அரசர்களிற் பெரும்பான்மையர் பற்பல படியாகப் பேசிக்கொண்டு தத்தம் தேசத்திற்குச் சென்றனர். ஸ்ரீமதி யாரால் அப்படித் திடீரென்று கொண்டுபோகப்பட்டாள் என்பதை யறிய விருப்பங்கொண்டு சிலர் அயோத்தியிலேயே தங்கினார்கள். சிலர் அம்பரீஷ மகாராஜன் ஏதோ சூது செய்து விட்டானென்றும் பேசிக்கொண்டார்கள்.

8. முனிவர்களிருவரும், இது மகாவிஷ்ணு செய்த மாயமாகத்தா னிருக்க வேண்டுமென நிச்சயித்து வைகுண்டம் சென்றார்கள்.

9. ஸ்ரீமதி வைகுண்டத்தி லிருக்கிறாள். இவள் முற் பிறப்பில் மாகவிஷ்ணுவைத்தான் அடையவேண்டுமெனக் கருதித் தவமியற்றியவளாதலால் இப்பிறப்பில் பகவான் அவள் கோரிக்கையை நிறைவேற்றக் கருதி இப்படிப்பட்ட லீலையைச் செய்தார். தவத்தின் பலன் வீணாகுமா?

10. மிகுந்த கோபத்துடன் அயோத்தியிலிருந்து புறப்பட்ட முனிவர்கள் வைகுண்டத்தை யடைந்து பகவானிருக்கு மிடத்தை நோக்கிச் சென்றார்கள். அவர்கள் வருவதைக் கண்ட பகவான் ஸ்ரீமதியைப் பார்த்து, "முனிவர்க ளிருவரும் வருகிறார்கள். நீ மறைவாக இரு; வேடிக்கை செய்கின்றேன்" என்றார். ஸ்ரீமதி அவ்வாறே மறைந்திருந்தாள்.

11. முதலில் நாரதர் பிரவேசித்து பகவானை நமஸ்கரித்து "என்னையும் பர்வத முனிவரையும் இப்படிச் செய்யத்தகுமா? நீர் தாம் அந்தப் பெண்மணியை

யெடுத்து வந்திருக்கிறீர். இது நிச்சயம்" என்று சொன்னார். பகவான் உடனே தம் இரு செவிகளையும் இருகரங்களால் பொத்திக்கொண்டு "அந்தப் பெண் மணியை நான் விரும்பி எடுத்துக்கொண்டு வரவில்லை" என்றார். நாரதர், "போகட்டும்; என்முகம் குரங்கின் முகம்போ லிருக்கிறதென்று சொல்லக் கேட்டேன்; அதென்ன காரணம்?" என்றார். "பகவான், "முனி வரே! உமது பிரார்த்தனைக் கிணங்கி முதலிற் பர்வத முனிவருடைய முகம் குரங்கு முகமாகத் தோன்றும்படி செய்தேன்; பிறகு அவர் என்னை வேண்டிக்கொண் டார். அதற்கிணங்கி உமது முகமும் குரங்குமுகமாகத் தோன்றும்படி செய்தேன். நான் பக்திக்குக் கட்டுப் பட்டவ னல்லவா? அதனாலேதான் இப்படிச் செய் தேன். நானாக ஒன்றும் செய்யவில்லை. என் பக்தர்கள் விரும்புகிறபடியே நான் வரங்கொடுத்து வருபவன். இது சம்பந்தமாய் என்னிடத்திலோ அல்லது உங்க ளிடத்திலோ ஒரு குற்றமும் சொல்லக் காரணத்தைக் காணோம்" என்றார்.

பிறகு பர்வதமுனிவர் வந்து பகவானை வணங்கி நின்றார். அவரைப் பார்த்து பகவான் புன்னகை புரிந்து நாரதரிடம் கூறியது போலவே சொல்லி "என் ஆயுதத்தைத் தொட்டுக் கூறுகின்றேன்; நான் உங்கள் விருப்பப்படி செய்தேனே ஒழிய நானாக ஒன்றும் செய்யவில்லை" என்றார்.

இதைக்கேட்டதும் நாரதர் பகவானைப் பார்த்து "சுயம்வர சபையில் எங்களிருவருக்கும் நடுவில் வில்லைக் கரத்திற்கொண்டு நின்று ஸ்ரீமதியை மயக்கி அப கரித்து வந்தவன் யாவன்?" என்று கேட்டார். பக வான் "நாரதரே! இதை யார் கண்டது; நான் சக்ரா

யுத முடையவனென்றும நான்கு புயங்களை யுடையவ னென்றும் நீங்களறிவீர்களல்லவா? உலகத்தில் மாயாவிகள் பலரிருப்பார்கள். அவர்களுள் யார் செய்த வேலையோ இது! கண்டதார்?'' என்றார்.

14. பிறகு முனிவர்களிருவரும் "பகவானிடத்தில் ஒரு குற்றமுங் காணோம்; அம்பரீஷன் தான் ஏதோ சூது செய்திருக்கிறான்" என்று கருதி அங்கிருந்து அயோத்திக்கு வந்து அரசனைக் கண்டு, "அம்பரீஷா! இது நியாயமா? பெண்ணைத் தருகிறேனென்று வரவழைத்துவிட்டுவேறொருவனை மறைத்துவைத்திருந்து அவனுக்குப் பெண்ணைக் கொடுத்து எங்களை மோசஞ் செய்தது தகுமா? ஆகையால் உன்னைப் பேரிருள் சூழ்ந்து கொள்ளக்கடவது. உன்னறிவு உனக்கில்லாமற் போகக்கடவது" என்று சாபமிட்டனர்.

15. உடனே அரசனைப் பேரிருள் சூழ்ந்துகொண்டது. அரசன் பரந்தாமனைத் தியானித்தான். பரந்தாமனது சக்கரம் அங்கே தோன்றிற்று. அதுகண்ட முனிவர்கள் பயந்து ஓடினார்கள். சக்கரம் அங்குச் சூழ்ந்த இருட்டைப் போக்கிக்கொண்டு முனிவர்களைத் துரத்திற்று. முனிவர்கள் தப்பவழி வேறு காணாமல் மீண்டும் வைகுண்டமே சென்று பகவானை யடைந்தார்கள். பகவான், அம்பரீஷனும் நமது பக்தன்; இவர்களும் நமது பக்தர்களே! பக்தர்களுக்கு எந்தக் குறையும் ஏற்படக்கூடாதென்று கருதிச் சக்கரத்தைத் தடுத்து, "பொறுத்துக்கொள்ள வேண்டும்; பக்தனாகிய அம்பரீஷனைக் காக்கும் பொருட்டு என்னால் இந்த மாயம் செய்யப்பட்டது; பொறுத்துக்கொள்ள வேண்டும்; பொறுமையைப் பூஷணமாகக் கொண்டவர்களல்லவா நீங்கள்" என்றார். இதைக் கேட்டதும்

முநிவரிருவரும் பகவானுடைய மாயையை யறிந்து வியப்புற்றுப் பார்த்து, "நாராயணா! எந்த ரூபத்துடன் மறைவாக இருந்து ஸ்ரீமதியை யபகரித்து வந்திரோ அந்த ரூபத்தோடு அம்பரீஷன் வமிசத்தில் பிறக்கப்போகும் தசரதனுக்குப் புத்திரனாக நீர் பிறத்தல் வேண்டும்! ஸ்ரீமதியும் பூமியில் உற்பவித்து ஜனக மகாராஜனுக்குப் புத்திரியாதல் வேண்டும்! இப்பொழுது, நீர் எங்களை ஏமாற்றி, ஸ்ரீமதியை யபகரித்துக் கொண்டு வந்ததுபோல, அப்போது உமக்கு மனைவியாகும் அந்த ஜனகன் புத்திரியை ஒரு இராக்ஷஸன் அபகரித்தெடுத்துக் கொண்டு போதல் வேண்டும். இப்போது நாங்களிருவரும் இந்த ஸ்ரீமதியின் பொருட்டு எந்தத் துக்கத்தை யடைந்தோமோ அந்தத் துக்கத்தை நீர் அனுபவித்தல் வேண்டும்." என்று கேட்டுக்கொண்டார்கள். பகவான், "நீங்கள் என் பரமபக்தர்கள்; தவிர, முநிவர்கள்; உங்களுடைய விருப்பம் வீண் போகலாகாது. ஆகையால் நான் அவ்வாறே செய்கின்றேன்" என்றார். முனிவரிருவரும் பகவானை வணங்கி விடை பெற்றுச் சென்றார்கள்.

16. போகும் வழியில் 'இனி நமது தேக முள்ளவரையில் விவாகம் செய்துகொள்ள எண்ணிப் பெண்களை விரும்புவதேயில்லை' எனப் பிரதிக்ஞை செய்துகொண்டார்கள். பெண்ணை விரும்புவது பெருஞ் சங்கட மெனவும் சொல்லிக்கொண்டார்கள். இவ்வாறு பேசிக்கொண்டே தத்தம் ஆச்சிரமமடைந்து எப்போதும் போலிருந்தார்கள். அம்பரீஷனும் பகவானது திருவிளையாட்டை யெண்ணி யெண்ணி வியந்து தன் இராஜ்யத்தை நீதி தவறாமல் ஆண்டுவந்து கடைசியில் மகாவிஷ்ணுவின் உலகம் சென்றான்.

பகவான் சர்வலோக சரண்யர்; சர்வலோகங்களை யும் படைத்தவர். அவரன்றி அணுவும் அசையாது. அவராக்ஞைப்படி யாவும் நடைபெறும். அவரைச் சரணமடைந்தவர்க்கே இகபரசுகமிரண்டும் கிடைக் கும். அவரது கருணை பெறாதவர்கள் இகபரமிரண்டி லும் துன்பமடைவார்கள். அப்படிப்பட்ட கருணையைப் பெற யாவரும் முயலவேண்டும். அதுவே மானிட ஜன்ம மெடுத்தவர்கட் கழகு. அது தவறிக் கண் தலை தெரியாமலும் இம்மை மறுமை உணராமலும் அலையும் அவிவேகிகளின் ஜன்மம் வீணேயாம்.

18. பெறற்கரிய செல்வமாகிய அந்தக் கருணை பக்தியாலன்றிச் சித்தியாதென்பது இந்தத் திவ்விய சரித்திரம் நமக்கு நன்கு விளக்குகிறது. அம்பரீஷன் அபார பக்தி செலுத்திப் பகவானது கருணைக்குப்பாத் திரமான படியாலல்லவா தன்னைச் சினந்து சபித்த முனிவர்களிடமிருந்து தப்பினன்! பகவான் பக்த பரா தீனனென்பது, அவர் இவ்விரு முனிவரிடமும் நடந்து கொண்டதே நன்கு விளக்குகிறதன்றோ? ஆகையால் பகவானுடைய கருணையை எவ்விதத்திலும் அடைய வேண்டும் என்பதும் அந்தக் கருணைக்கு ஆதாரமாகிய பக்தி புரிதல் இன்றியமையாத தென்பதும் நாம் ஒவ் வொருவரும் கவனிக்கத் தக்கனவாம்.

சுபம்! சுபம்!

முற்றிற்று.

# அரும்பதவுரை.

இனியள் = மகிழ்ச்சி தருபவள்
தயாவகுணம் = இரங்குங் குணம்
சேஷபரியங்கம் = ஸர்ப்பராஜனுகிய ஆதிசேஷன் என்னும் [கட்டில்
காயம் = தேகம்
பரந்தாமன் = விஷ்ணுவின் நாமங்களில் ஒன்று
மக்கட்பேறு = குழந்தைகளாகிய செல்வம்
தன்மை = கோரிக்கை அடையப்பெற்றவள்
சதாசார சீலன் = எப்போதும் நல்ல ஒழுக்கங்களை அனுசரிக் [கும் குணமுடையோன்
மகவு = குழந்தை
அரவிந்த லோசனன் = தாமரைக் கண்ணன்
வியப்பு = ஆச்சரியம்
ஜனார்த்தனன் = விஷ்ணுவின் நாமங்களில் ஒன்று
புவனம் = உலகம்
ஒளதாரியம் = உதாரகுணம்
அங்கவீனம் = அவயவக் குறைவு
காமம் = இச்சை அல்லது விருப்பம்
குரோதம் = கோபம்
லோபம் = உலுத்த குணம்
மோகம் = மயக்கம்
மதம் = அகங்காரம்
மாற்சரியம் = பகை
திருமடந்தை = லக்ஷ்மி
சதமல்ல = நிச்சயமல்ல
இதயாரவிந்தம் = ஹிருதயமாகிய தாமரை
ஐராவதம் = இந்திரனுடைய வெள்ளை யானை
சார்ங்கம் = வில்
அஞ்சனபர்வதம் = மைபோன்ற கருமையான மலை
அப்ரமேயன் = மனதிற்கெட்டாதவன்
சோரபயம் = திருட்டுப்பயம்
கிருதார்த்தன் = எல்லாம் அடையப் பெற்றவன்
பதாகை = கொடி

உ

செந்திலாண்டவன்
திருவடி துணை.

வரகவி-திரு-அ-சுப்ரமண்ய பாரதியார்
இயற்றிய

# கற்பிலக்கணக் கும்மி.

## விநாயகர் காப்பு.

குறம்.

உலகமெலாம் புகழ்பெருக ஒங்குமட வார்தம்
உயர்ந்த கற்பு லக்ஷணத்தை யுள்ளபடி பாடக்
கலகவினைத் தீதகற்றி நலமளிக்குந் தெய்வ
கஜமுகன்பொற் பாதமலர் பஜனைபுரிவாமே (1)

## பரமசிவ வணக்கம்.

அருமறைமா முனிவர்களும் அமரர்களும் போற்றும்
அறிவுருவச் செழுங்கனியை யன்பர் வினை மாற்றும்
பரமசிவ மூர்த்தியைவிண் பாரனல்கால் புனலாய்ப்
பரவுமஹா தேவனையாம் பாடிப் பணிந்திடுவோம் (2)

## உமாதேவி.

கல்லால மரத்தடியிற் கருணைவடி வாகி
கருதரிய மறையுரைத்த பரமகுரு வேபோல்
அல்லாருங் குழன்மடவார்க் கானகற்பைத் தேற்ற
அமலகுரு வானவுமை கமலபதம் பணிவாம் (3)

## திருமால்.

எங்கும்பரி பூரணமா யிருந்துலக முழுதும்
இன்னருளிற் காத்துயிர்கட் கின்பசுகம் நல்கும்
சங்குசக்ரந் தரித்தபரந் தாமனந்தா மரைப்பூம்
சரணஞ்சிர மணிந்து செங்கை தட்டிக்கும்மி யடிப்பாம் (4)

### செந்திலாண்டவன்.

தங்கமலை வில்லிதரு துங்கமுரு கேசா
சந்தமறை போற்றுந்திருச் செந்திநகர் வாசா
மங்கையர்கற் பிலக்கணத்தை யிங்கிதமாய்ப் பாட
வந்துகுடி கொண்டெனது சிந்தையிருந் தருளாய் (5)

### சுப்ரமண்யர்.

அண்டசரா சரமுழுது மளித்தவைகாத் தருளும்
அம்மைவள்ளி குஞ்சரியோ டழகுமயி லேறி
தொண்டர்துயர் நீக்கவருஞ் சுப்ரமண்ய தேவன்
சுருதிமணிச் சிலம்பொலிக்குஞ் சரணமலர் போற்றி (6)

### ஸரஸ்வதீ—இலட்சுமி.

வந்தனைசெய் யன்பர்மன மாசறுத்தாண் டின்ப
வாக்கொடுஞா னங்கலைகள் வழங்குகலை வாணி
பந்தவினை போக்கியெல்லா பாக்கியசுகம் நல்கும்
பங்கஜப்பூந் தேவியிவர் பாதம்பணிந் துய்வாம் (7)

### குருவணக்கம்.

பத்திதரும் நூல்கள்பர முத்திதரும் நூல்கள்
பலவிதமாங் கலைகளையும் பகுத்தறியுஞ் சத்தி
புத்தியுறப் போதனைசெய் பொதன்சிவா நந்தன்
பூங்கமலத் தாள்கள்சிரந் தாங்கிவணங் கிடுவோம் (8)

### நூல்.

அன்னலக்ஷுமி விஜயலக்ஷுமி அம்புஜ மீனாக்ஷி
அம்பவள மேனிவன ஜாக்ஷி கமலாக்ஷி
சொர்ணவல்லீ அமுதவல்லீ தோகையஞ்ச னாக்ஷி
சுகுணவதி குமுதவதி துங்கஜக தாம்பா (9)

சரஸ்வதி காமாக்ஷி யெழிற் ஜகன்மோக னாங்கி
சண்பகப்பூ மேனிமின்னே சகலகலா வல்லீ
கரணமுழு தொத்துலகிற் கற்புநிலை நாட்டிக்
ககனசுர ருரகரெலாம் புகழவிசை கொண்ட (10)

மங்கையரைச் சிந்தைசெய்து வாழ்த்திமகிழ்ந் தாடி
வழுத்துங்கற்பு லக்கணத்தை வந்தமட்டும் பாடி
செங்கைதட்டிப் பதம்பெயர்த்துச் சேர்ந்துகும்மி கொட்டி
சிந்தைகளி கொண்டிடுவோஞ் செந்திருவன் னாரே (11)

அருந்ததிகற் பனசூயை யமுதனசூ கன்னி
அமலசந்திர மதிபுவன மாண்ட தமயந்தி
திருந்துபுகழ் சாவித்ரி திரௌபதி முன்னான
தெய்வ மட மாதர் பதஞ் சென்னிபுனைந் தேத்தி (12)

மதி வதனம் நில வெரிக்க வச்சிரப் பொட் டொளிர
வாணகைச்செம் பவள வண்ண வாயழகு தோன்ற
அதிர்கடக மின்ன மணி யாழிகரத் திலங்க
அடியெடுத்து வைத்துக்கும்மி யடி யுங்கும்மி யடியும் (13)

அக்கினிமுன் கைபிடித்த அரிய மணவாளன்
அன்றியொரு தெய்வமில்லை யென்று பணிந் தேத்தி
மிக்கபய பக்திவரு நிற்குமட வாரை
விண்ணவரும் மண்ணவரும் மெண்ணியடி பணிவர் (14)

நாயகன் சொல் தவறாமல் நடப்பதுவே தருமம்
நல்ல பலதானம் ஜபம் நாடரிய தவமும்
தூயபா மேசனடி தொழுதலுமா மென்றும்
சொன்னகற்பு நெறியில் நிற்குஞ் சுகுணமட வார்க்கே (15)

கணவ னுண்ட பின்னையவர் கலத்தி லுண்டு களிப்பார்
கண்டுயின்ற பின்றுயின்று காலையில் முன் னெழுவார்
துணைவன் தந்தை தாயாரைத் தூஷணைசெய்யாமல்
சொன்னபணிவிடைகள் செய்வா ரன்னநடை மாதர் (16)

அன்னைபிதா மக்களிலும் அன்பரையே சிப்பார்
அவரின்ப துன்பந்தம தாகநினைந் திடுவார்
சொன்னபணி யெவையெனினுஞ் சொல்லுமுனஞ்செய்வார்
துணைவனிற்கும் வேளையிலே தணிந்திருக்க மாட்டார் (17)

அன்பர் முனிந்திடினு முகம் அருவருத்துச் சுளியார்
அவரெதிரிற் கடுகெடுப்போ டடுத்துபதிற் சொல்லார்
துன்பமுற வடித்தாலும் இன்பமுறப் பேசி
தோகை நல்லார் கற்புநெறி யோகை யுட னிற்பார் (18)

கொண்ட கண வன்கருத்தின் குறிப்பறிந்து செய்வார்
குறுமுறுவல் முகத்தி லென்றுங் குலவத் துலங் கிடுவார்
பண்டங்களை யந்தந்தப் பருவங்களிற் சேர்ப்பார்
பாழாக வழிக்க மனம் பதருந் துணியார்கள் (19)

வேடிக்கையுற் சவனைக்கல் விரும்பிநதி யாடல்
விரதாதி நோன்பு தெய்வம் வேண்டித் தொழுதேத்தல்
நாடிச்செங்கை பிடித்த தங்கள் நாயக னுத்தரவால்
நடப்பதன்றிக் கற்புடைய நங்கையர்செய் யாரே (20)

இறந்தோர்க்கும் துறந்தோர்க்கும் இரக்கும் வறியோர்க்கும்
இஷ்ட தெய்வம் பசுவிருந்துக் கிட்டுகண வற்கும்
நிறைந்த சுவை யுண்டிமிக நேயமுட னிட்டு
நித்தமுந் தா முண்பர்கற்பு நெறிதவறா மாதர் (21)

மாத விடாய் நாளில்மண வாளன் முகம் பாரார்
வான் புனலாடிய பின்பு வந்து தெரிசிப்பார்
நாதனகத் தில்லாத போதிலவன் வடிவை
நயந்து மனத்தெண்ணி யொளிர்*ஞாயிறையே காண்பார் (22)

† வனப்பறிவு கல்வியிலா மந்தமதி யாளன்
வயது சென்று நோய் மிகுந்த ‡ வறியன் பதியேனும்
மனத்தி லவமதியார்கள் மற்றவன் றாள் விளக்கும்
மானறுநீர்க் கங்கையினும் மேன்மையெனக் கொள்வார் (23)

கணவனக மகிழவணி பணியணிவா ரகத்தில்
காதனில்லா திருக்கும் போதழகு செய்யார்
மணமகனைத் தூறுசொலும் மாதரொடுங் கூடார்
மற்றுமயல் வீடு செலச் சற்று மனத் தெண்ணார் (24)

நாயகன தாயுள்விருத்தி நாடி மஞ்சட் பூசி
நல்ல குங்குமம் புனைந்து நகைபலவும் பூண்பார்
தூய மண வாளன் பெயர் சொல்ல மனங் கொள்ளார்
சொற் பெரிய கற்புடைய தோகை மடமாதர் (25)

* ஞாயிறு=சூரியன். † வனப்பு=அழகு.
‡ வறியன்=தரித்திரன்.

படி மரக்கால் முறம் வாசற் படியுலக்கை யம்மி
பரவு முறல் மீதிருந்தால் திருவகலு மென்று
கொடியிடை யா ருட்காரார் கொழுநன்போ டவரை
கூப்பிடுமுன் வந்து மகிழ் கொண்டு பணி செய்வார் (26)

சொன்ன கற்பு நெறியில்லாத் தோகையரைக் காலன்
துன்புறுத்தி நரக மெனுந் தொடுகுழி வீழ்த்திடுவான்
பின்னுமவர் நாய் நரியாய்ப் பேய் புழுவா மீனப்
பிறவிபல வெடுத் துலகிற் பிறந்திறந்து திரிவார் (27)

கற்புடைய மாதரையே கண்டுறவு கொள்வோம்
பொற்பணியாய்க் கற்பினையே பூண்டுபுகழ் பூண்போம்
கருதியவர் பாதமலர் சிரசின் மிசை கொள்வோம்
பொங்குபிர்மா னந்தக்கடல் தங்கிமகிழ்ந் திடுவோம் (28)

அருந்ததியொப் பானபெண்க ளடிமலர்கள் சூடி
அகலிகை நேரானவரை யிகழ்ந்தொதுக்கித் தள்ளி
மருந்தனைய கற்பைமண மாலையெனப் பூண்டு
வாழ்வமிமை யோரும் வந்து தாழ விறு மாந்தே (29)

வாழி மஹாதேவனுமை வாழி முருகேசன்
வாழி விக்கிநேசர் திரு மால் முதலோர் வாழி
வாழி மறை யாகமங்கள் வாழி யுலகங்கள்
வாழி கற்பு நெறி தவறு மாதர்களும் வாழி . (30)

முற்றிற்று.

17949

# சிறுவர்களுடைய அறிவை அபிவிர்த்தி செய்யும் புத்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விநோதரஸ மஞ்சரி | 1 | 2 | மாதவன் நாவல் | 0 | 10 |
| நீதிநூற் கொத்து | 0 | 6 | ஸாவித்திரி | 0 | 6 |
| சதகத்திரட்டு 1ம்பாகம் | 0 | 9 | நீதிநூற் றிரட்டு | 0 | 8 |
| ஷை 2-ம் பாகம் | 1 | 0 | மாதரொழுக்க இலக்கணம் | 0 | 2 |

| | | | |
|---|---|---|---|
| விவேக சிந்தாமணி மூலமும் உரையும் 1-ம் பாகம் | | 0 | 6 |
| ஷை 2-ம் பாகம் | | 0 | 6 |
| வியாஸபோதினி இரண்டுபாகமும் | | 0 | 9 |
| நீதிநெறி விளக்கம் (குமரகுருபர ஸ்வாமிகள் செய்தது) உரையுடன் விலை அணு | | 0 | 5 |
| நீதி வெண்பா உரையுடன் விலை அணு | | 0 | 8 |
| நல்லொழுக்கம் (வசனம்) விலை | 0 | 0 | 9 |
| திருவள்ளுவர் திருக்குறள் மூலம் இதில் பால், இயல் அதிகாரம் செய்யுள் முதற்குறிப்பகராதியும், ஒவ்வொரு அதிகாரத்துக்கும் இங்லீஷ், தமிழ் ஹெட்டிங்கும் அடங்கியுள்ளன விலை அணு | | 0 | 4 |
| இனிது நாற்பது (கபிலரியற்றியது) உரையுடன் அணு | | 0 | 1½ |
| களவழி நாற்பது (பொய்கையார் இயற்றியது) உரையுடன் | | 0 | 2 |
| சிறுபஞ்சமூலம் (காரியாசன் செய்தது) உரையுடன் | | 0 | 4 |
| நான்மணிக்கடிகை (விளம்பிநாயனர் செய்தது) உரையுடன் விலை அணு | | 0 | 5 |
| முதுமொழிக்காஞ்சி (கூடலூர் கிழார் செய்தது) உரையுடன் விலை அணு | | 0 | 2½ |
| திரிகடுகம் (நல்லாதனர் செய்தது உரையுடன் அணு | | 0 | 4 |
| ஏலாதி (கணிமேதையார் செய்தது) உரையுடன் அணு | | 0 | 5 |
| அறநெறிச்சாரம் (முனைப்பாடியார் செய்தது) மூலமாத்திரம் விலை அணு | | 0 | 4 |
| ஆசாரக்கோவை (பெருவாயின் முள்ளியார் செய்தது) மூலமும் உரையும் விலை அணு | | 0 | 8 |

1717R
1308



## அறிவு கொடுக்கும் நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜடாவல்லவர் | 1 8 | நன்னூல் மூலம் | 0 2 |
| நவநீதம் | 0. 3 | திருவன் | 0 2½ |
| சுந்தரவல்லி | 0 8 | பெற்றோர் பெருமை | 0 1 |
| ஜெயலட்சுமி | 0 8 | தெய்வ மகிமை | 0 1 |
| மதாலஸா | 0 3 | பாலராமாயணம் | 0 2 |
| தீனதயாளு | 0 8 | குமரேச சதகம் | 0 2 |
| ஸகுந்தலா | 0 4 | அறப்பளீசுர சதகம் | 0 2 |
| க்ஷத்திரியராணி | 0 2 | விவேக சிந்தாமணி | 0 1½ |
| கிரிஸல்டா | 0 3 | பிரகலாதன் சரித்திரம் | 0 4 |
| மரியாதைராமன்நாடகம் | 0 3 | ஸ்ரீவாமன சரித்திரம் | 0 2 |
| புத்திமானே பலவான் | 0 8 | ராயர் அப்பாஜி | 0 1 |
| பரதன் - வசனம் | 0 5 | மரியாதைராமன் | 0 2 |
| பரதன் நாடகம் | 0 10 | நான்குமந்திரிக்கதை | 0 2 |
| கர்நாடக யோகினிக் கதை | | டத்மினி | 0 3 |
| நெ. 1 | 0 4 | ஸத்ய ஹரிச்சந்திரன் | 0 6 |
| ஷை நெ. 2 | 0 4 | மிருச்சகடி | 0 4 |
| ஸ்ரீமதி பக்தி சந்திரிகா | 0 1½ | அராபிநைட்கதை | 2 8 |
| கதாசரித் சாகரம் | 1 4 | விக்ரமாதித்யன் கதை | 1 8 |
| கற்பின்வெற்றி | 0 8 | பாரிசுக்கதை | 1 8 |

| | |
|---|---|
| நன்னூல் காண்டிகை உரையுடன் | 1 0 |
| ஸரஸ்வதி அந்தாதி மூலமும் உரையும் | 0 5 |
| பெற்றோரும் பிள்ளைகளும் | 0 1 |
| திருவேங்கடசதகம் அரும்பத வுரையுடன் | 0 2 |
| பிரகலாதாழ்வான் சரிதை | 0 6 |
| விசயத்தவசியும் சிவவேடனும் | 0 2 |
| திராவிட பூர்வகாலக் கதைகள் | 0 8 |
| தக்காணத்துப் பூர்வகாலக் கதைகள் | 0 12 |
| பாரத வினவிடை 3-பாகமும் | 2 4 |
| பாகவத வினவிடை 2-பாகமும் | 1 12 |

விலாசம்:—ஸ்ரீபால சுப்ரமண்யம் கம்பெனி,
'குமாரவிலாஸ்' ராயபேட்டை, சென்னை.